92
192

THE REGISTRAR OF ... MADRAS

உ

திருச்சிற்றம்பலம்.

ஓம் ஸ்ரீ குருபாதம் துணை.

இஃது

ஸ்ரீ கைலாசம் 1008. சிவலிங்க க்ஷேத்திரத்தில் மகாமருத்துவமான
ஸ்ரீ சிவசிதம்பரம், சப்தரிஷித்துறை, வாலீஸ்புரம்,
பிரம்மாபுரம், தேவார திருவாசகம்.

ஸ்ரீ விருத்தாசல அந்தாதி.

ஷை பிரமாபுரமென்னும் பெரம்பலூர் தாலுக்கா உத்திரதிசை
பிரமரிஷிமலைசார்பின் திருவாச தவமடாலயம்
சுத்தாத்துவித சைவ சமயாசிரியர் மரபு

ஸ்ரீலஸ்ரீ இரா. வாலைகுரு சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது.

ஷை சுவாமிகள் குமாரர் ஸ்ரீமத் கணேசமூர்த்தி சுவாமி,
குருநாத சுவாமி, இராமலிங்க சுவாமி போதகாசிரியராய்
அத்தியூர் ப. முத்துசாமி நாயனர் துணையாலும்
ஷை பெரம்பலூர் தாலுக்கா பாளையம், சி. பெருமாள்ரெட்டியார்
பெரியசாமி ரெட்டியார், சிதம்பர உடையார், சோலைமுத்து
படையாச்சியார், அப்பாவு முதலியார், மா. குழந்தை அம்
மாள், ஷை குரும்பலூர், ரா. பச்சைமுத்து கோனர்
பொருளுதவியாலும். மற்றும் பதினெண்சமயத்து
...டியார்கள் திரவியசகாயத்தாலும்

...ஸ்ரீ வேலன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.
...ட்டு] 1948. காப்பி 1000. விலை-உபயதக்ஷணை

O-,12LVG,V
N48
113945

உ

ஓம் விருத்தாஜலாயா நம:

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ விருத்தகிரி ஈசர் துணை.

விருத்தாசல அந்தாதி.

வெண்பா.

திருவே அருள் பூத்த சிவனடியா ருளத்திகழும்
குருவே குமர வேலனையீன்ற, மருவுமிடை
விருத்தாம்பிகைப் பாகா வேண்டினே னென்றும்
ஒருவனே விருத்தாசலா. (1)

என்று மருள் மன்னும் மீசனே யிருமைவினை
கொன்றுகதி யருளீயுங் குருபரனே, மன்றுள்
ஆடும் பழமலை என் னப்பாவுன் பாதம்
நாடினேன் விருத்தாசலா (2)

அப்பா நான் வாடி அலைந்துலுத்தே னைசயினற்
செப்பாயுன் சிவனடியார் செய்ததவம், ஒப்பில்லா
அருளே என்னிரு கண்ணின் மணியே ஆதரவற்று
இருளடைந்தேன் விருத்தாசலா (3)

ஆதரவாரிப்பு வியிலலைந்தாருணைப்பேசாற்
பேதமுளாருடன் சேர்ந்துப் பேசாதே, போதமருள்
அன்பருடன் சேர்ப்பாயாதியே பழமலைத்
துன்பகற்றும் விருத்தாசலா (4)

ஆதியே பழமலை யப்பா என் னிருகண்ணே
சோதியே சும்மாயிருக்காமல், வேதிக்கும்
மனத்தாசையால் மாண்டுபிறந்து நான்சாகாத
இனமாவாய் விருத்தாசலா (5)

சாகாத கருணையே சச்சிதா னந்தமென்ற
வேகாத விருத்தாம் பிகைக்காலே போகாதப்
புனலே மணிமுத்த நதியாடும் புண்ணியனே
கனலே விருத்தாசலா (6)

முத்தி நதியாடி முழுநீரும் உருத்திராக்ஷஞ்
சித்தி தரும் யோக வேஷ்டியுமணிந்து, பத்தர்களால்
தீயமுது தூபமொடு தியானமிட்டுத் தினம்போற்றும்
தாபமணி விருத்தாசலா (7)

தினம்போற்று மாதி திரு முதுகுன்றீசனே
ஜனகனாதியர் கலிதீர் சுவாமியே — மனமிடும்போர்
விட்டதே சிவஞான யோகமெனும் வேதங்
கட்டிதா விருத்தாசலா. (8)

வேதமென்று மின்றும் வேண்டித் தினந்தேடும்
பாத மிதஞ் சும்மா பார்த்து துதி, நீதமுத்தி
தருவாய்சர்வ வியாபகரே என்னுள்ளங்
குருவே விருத்தாசலா (9)

உள்ளமே கோவிலுணர்வே சிவலிங்கங்
கள்ளமல மறுப்பதுவே கதியென்று. தெள்ளுமறை
சொல்லுஞ் சிவானந்தசோதியே தொண்டனுக்குஞ்
சொல்லுவாய் விருத்தாசலா. (10)

சொல்லாயும் ஞானச் சுடராயுஞ் சுரூபியுமாய்
அல்லுபக லற்ற வருளற்புதமாய். பொல்லேனுள்
போற்றுதுவுமாகிப் புலன்பூதப் பொதியற்று
ஏற்றுவதீ விருத்தாசலா. (11)

பூதம் பொறியற்றப் பூசையாம் பூரணமாம்
வேதம் பலவாய் விளம்பும் — போதம் வளர்
புத்தி தா பூரித் தொடுங்கி யிரும்நேசத்தில்
சித்திதா விருத்தாசலா. (12)

ஒடுங்கு பரி பூரணத்தி லோம் நமசி வாயமென்று
முடங்கி சும்மா மூச்சற் றிருப்பதற்கு — இடந்தருவாய்
திருமுதுகுன்றீச தேவர் கலிதீர்க்குந்
திருவுளமே விருத்தாசலா. (13)

தீற்குமிருள் தோஷம் செட்டிமக னறுவருக்கும்
பார்க்கும் விழி குருடனுக்கும் பகலளித்து, மூர்க்கனுக்கும்
முத்தி தந்தாய் முதுகிரியில் மூவரன்பர் சித்தருக்குப்
பத்தி தந்தாய் விருத்தாசலா (14)

அன்பர்சிவ பூசைக்கு அனுதினமும் வந்துதவும்
நின்பதமே தருவாய் நீசனுக்குத் — துன்பமொன்றும்
வாராது வாளம் பிழைப்பாகா எந்தனுக்குந்
தீராதோ விருத்தாசலா (15)

எந்தனுளம் நீங்காயின்ப சுகவெள்ளம்
பந்த பாசந்தீர்க்கும் பழமலை வாழ் — எந்தை
யீசனேமுது குன்றா ரெம்பெருமா னென்றேத்த
நேசனே விருத்தாசலா. (16)

என்னுந்துணையாகு மெந்தையே என்போலும்
துன்று வினைத் தொடர்பா ருலகத்தில் — வென்றுவிடும்
நினைவென்ன நலந்தீதில் நிலைமாறி யலையும்
உனைதொழுதேன் விருத்தாசலா. (17)

தொழுவார்க்கு என்னகுறை சுவேதநதி வாழும்
விழுப்பொருளே கலிங்க னுடல் குறையை, பழுதறவே
தீர்க்குமருட்பிரகர்சா சிவசிவா வென்பார்க்கு
கார்க்கும் விருத்தாசலா (18)

சிவசிவாவென்று திருமுத்த நதிக் குளித்துருகி
சிவசிவா திருவெண்ணீ ரணிந்தவர்க்கு, சிவசிவா
தீவினைபோம் ஜென்ம சாபல்லியமுந் தீர்ந்துவிடும்
மூவினைபோம் விருத்தாசலா (19)

தீர்ந்து விடுஞ் சித்தத் திருளறுத்தோற்கெல்லாம்
கூர்ந்தளிப்பீர் ஞானோப தேச மெலாம் — நேர்ந்தென்று
போற்றுவா ரன்ப ரென்றும் பூரிப்பாற் புத்தமுதாய்
ஏற்றுவார் விருத்தாசலா. (20)

பூரிப்பாருசுவாஸ நிசுவாஸ மிரண்டு மிதம்
கோரிப்பாரேசித்து பூரித்துக்கும் பித்து — தேரிப்பாழ்
மூன்றறுத்து நாலாம் படிமே லுஞ்சாசு வதந்
தான்றுணைய் விருத்தாசலா. (21)

சாசுவதமே சகலகேவல மற்றுப்
பூசிக்கும் ஞானோதயப் பொருளே, தேசிகராய்
வந்துதவு முதுகுன்றார் வாலாம்பிகைப் பாகா
தந்துவிடும் விருத்தாசலா (22)

விடுகாது மாதர் விடமாயை விபரீதம்
சுடுகாடு போக்குஞ் சுகதுக்கம், படுகாடு
பாவம்பா ரப்பர பற்றுக நீ ரென்னையுமே
கோவமேன் விருத்தாசலா (23)

என்னை யென்று அன்ப பணிக்கிடாக்கிவைப் பாயோ
உன்னைமறவா தென்றுமுணர்வேனே — தன்னை
தானறியுந் தலைவா தக்கன் தலை யெரித்த
கோனே விருத்தாசலா. (24)

தலைவனே சடாக்ஷர வஷ்டாக்ஷர பஞ்சாக்ஷரமாய்
நிலைமையாய் போற்றும் நித்தியற்கு — கலைஞானங்
கற்றுக்கொடுக்குங் கடவுளே எங்களுக்கும்
முத்தி தா விருத்தாசலா. (25)

கொடுக்குங் கருணைக்குணச்செல்வமே மலங்கள்
விடுக்குங் கருணையளிவித்தகமே — தடுக்குந்
தத்துவங்களை பறிக்குஞ் சங்கரரே சாம்பசிவ
வஸ்துவே விருத்தாசலா (26)

வஸ்துவென்ற வாசிவளை மாறு மண்டலத்தில்
கஸ்தியராப் பார்த்து கலந்திருக்கும், விஸ்தார
வெளிவீடுங் கட்டி வேதாந்தம்பயிலும்
ஒளிவிடும் விருத்தாசலா (27)

பயிலுமருள் நித்தியத்தில் பல் காலம் பயிலுந்
துயிலுமத்து விதவாணாய்த் தோத்தரிக்க — ஒயிலும்
அதிசயமாய் தற்பரானந்தமுமாய்; அப்பாழுந்
துதிவெளியாய்விருத்தாசலா (28)

வெளியில் வெளியாய் விளங்கு பேரானந்தம்
தெளிவிற் றெளிவாய்த் தேடுதற்கு, ஒளியாகுஞ்
சச்சிதானந்தத் தாண்டவ மூர்த்தந்தருள்வாய்
மூச்சுடரே விருத்தாசலா (29)

திரண்டவனே சோதி சடாதார கூடஸ்த
ஆண்டவனே அறிவு தருங்குரு மூர்த்தி, நீண்டபுலை
நீசமனநினைவேன் நிகராய் வைத்தெனை விட்டாய்;
ஈசனே விருத்தாசலா (30)

விட்டாய் பொய் வாழ்வில் விதிதலை முன்னான்முகனும்
கட்டா யெழுதின தென்றென் நினைவாய்,- இட்டதென
தினந்தினமுந் தாழ்ந்தேன் திக்குவேறில்லாமல்
மனத்தாலே விருத்தாசலா (31)

தினம் போற்றுஞ்சோதி பழமலையார் சந்நிதியில்
வனநாத ரிருடிசிவ சித்தர் துதி,- மனங்கமிழ
அரகரா சிவ சிவா அப்பா வென்பார் தினமும்
அரகரா விருத்தாசலா. (32)

தினந் துதிக்குஞ் சித்தத்தே திருவருட்டேனூறு கின்ற,
ஜனகாதி பதினெண்பேர் சரணடைந்த • கனகசபை
திருசித்தப்பல வாணதேவர் பழம் பொருளே,
குருசித்தம் விருத்தாசலா. (33)

மான்மழு வேந்துங் கையாமதி புனலைச் சிரஞ் சூடி
வான் கைலாயத்தில் திருநடமாடும்,- தேன் மலர்ந்த
சிவகாமி பூவை சிவ சிவாயிடம் வைத்த
தவமே விருத்தாசலா (34)

சிவ சிவா வென்றுன்னைச் சித்தத் தொருகாந்தான்
சிவ சிவா வென்று தியானித்தால்,- தவம் பெருகி,
முத்தியுண்டா மோக்ஷ நாலாம்படியுமுண்டாஞ்
சித்தியுண்டாம் விருத்தாசலா. (35)

மோக்ஷம் வளர் விருத்த காசி வாழ் முழுமுதலே
காக்ஷி கிடைக்குமாம் கர்மம் போய்,- ஆக்ஷி
வாலாம் பிகைத்துணையாய் வாழ்குவா ரென்கிறார்
காலா விருத்தாசலா (36)

துணையாகுமம்மை விருத்தாம்பிகையாள் சொல்ல
பிணைந்துமுத்தி பேரின்பவீடு புக, அணைக்கும்
அருள்பெருகு மம்பலவா ஆதியே பழமலைப்
பொருளே விருத்தாசலா (37)

அம்பலவா ஆதியந்த நடு வெளியா யொளிர் சோதி
செம்பவளத் திரளமுதச் சிற்பரமே,- உம்பர்துதி
ஒருவா குரு நமசிவாயர்க் கமுதூட்ட வந்த
குருவே விருத்தாசலா (38)

நமச்சிவயா நாதாந்த நாயகியா ளூட்டவந்த
விமலா வீண் காதைபக ரிதத்தாலே; அமலா
ஆதார மற்ற அடியனுன் மிகச் சிறியேன்
வாதா விருத்தாசலா (39)

வாதா யென்மேல் தினமும் வாலாம்பிகை மகிழும்
வேதா நான் கேட்ட தெலாமன்னித்து, — தீதற்று
சித்த மசையாத தீக்ஷையெனக் களிப்பாய்
வித்தகா விருத்தாசலா (40)

தீக்ஷை திருமந்திரஞ் செவியி லுபதேசிக்கும்
காக்ஷிமலக் கருவியற்ற கருணைசுகம், — மூச்சடங்கி
ஊதினார் தன்னு ளுகங் கோடி கர்ப்ப முண்டு
ஓதினார் விருத்தாசலா (41)

தின்னு ளருள் பாராமற் சாவதேன் சஞ்சலமாய்
உன்னு ளுண்டுத்தமரென் றுறை வேதம், — மன்னும்
ஞான சிவப்பிரகாசா நானீயற்றிருக்கும்
மோனமே விருத்தாசலா (42)

மோனமே நவநீத முத்தி சித்தி வைராக்கிய
தானமே சர்வ பூத வியாபகமே, — பானமுதாய்
போற்றித் துதிக்காமற் பொன் மண்ணும் பெண்ணை ஐயோ
எற்று கிறார் விருத்தாசலா (43)

மூன்றுரைசைப் பேசும் மூற்கருடன் சேராமல்
நான் தானென் றெண்ணி நழுவாமல், — மான்மழுவுஞ்
சூடும்பெருமான் சுந்திரர்கை பொருள்திருடி
ஆடும் விருத்தாசலா (44)

பொருளாசைக் கொண்டுப் பூவுலகில் சாகாமல்
அருளாசைப்பெற்ற அன்பர்பணி, — இருள் மாயை
சேராவரமளிப்பாய்த் திருமுதுகுன் றீசா
கோராய் விருத்தாசலா (45)

நேராயோ நித்திரை மைதுன மற்ற நிலாவீட்டில்
வாராயோ என்றும் வாழ்த்துதற்கு, — கூராயோ
ஐந்தெழுத்தினுட் பொருளை யாராய்ந்து போற்ற
பிஞ்செழுத்தாய் விருத்தாசலா (46)

ஆராய்ந்துள்ளாதி யந்த நடுதேடிப் பாராமல்
சீராயிருந்து செபஞ் செய்யாமல், — போராயும்
மனத்தூதோ டினித்து மறந்தேனுன் றிருவடியை
சினத்தூதேன் விருத்தாசலா (47)

தூதென்னப் பொல்லா செவி புலனு மாட்டி
வாதென்ன மனமாயை வழக்கென்ன, — சூதென்ன
காதையோவுனக்கப்பா கண்டினித்துப் பேசும்
வேதையோ விருத்தாசலா (48)

பேசும் பிரம்மானந்தக் காதைவுனக்கிருக்க
ஆசுமலக் காதையே னழிவதற்கு, — தேசிகரே
சும்மாயிருக்குஞ் சுகராதி போலெனக் கீ
யெம்மான் விருத்தாசலா (49)

எம்மானுன் ஞமமிடையற நான் போற்றுதற்கு
சும்மாயிருந்த விடஞ் சுகமென்றூர், — அம்மா
அந்தோ அதிசயம் பாரண்ணலார் தீக்ஷையென்றும்
எந்தாய் விருத்தாசலா (50)

தீட்சை பகர் சோதி சிவமே திரிமலப்பேய்
மூட்சை வெளியோட்டாது மூலமதில், — காட்சிபெரும்
கனல் மூட்டிக் கண் மூன்றுடையானே அப்பா
புனல் சூடும் விருத்தாசலா (51)

கண்ணே கருணைகாக் கடலே கவலை யற்று
எண்ணு தீராறுகலை யான்கட்டி, அண்ணு
ஆறுதள வீடு மடுக்கடுக்காய்க் கட்டி சும்மா
பாரென்பாய் விருத்தாசலா (52)

பாரென்பாய்த் தன்னுள் பரவெளியாய்த் தோன்றி நீ
காரென்பாய்க் காதலித்து யானிருக்க, — சீரொன்ற
செந்திருவே உமைபங்கா தேவாதி தேவனே
சொந்தமே விருத்தாசலா (53)

சொர்க்கமனையாட்டி ஆசையினால் தொடர்ந்தையோ
சிந்தை தடுமாறி தீவினைக் காளானேன், எந்தவழி
போவதையா யீடேறிப் போகாம லுலகோர்போல்
சாவதோ விருத்தாசலா (54)

அன்பர் பணிக்காசை பட்டு அருளமுதைப் பெய்கின்ற
நன்பே நாலாம் பதவி நல் காயோ, துன்பகற்றி
சும்மாயிருந்து சுகம் பெற்றப்பா தூங்கவைப்பாய்
எம்மான் விருத்தாசலா (55)

தூங்கவைப்பாய் சோதி சுத்தவெளி வீட்டினுனை
ஏங்கிப் பணிந்தேழை குடிபாக, — நீங்காத
நிஷ்டை தருவா யெனக்கு நித்தியமே தில்லைவளர்
நிஷ்டையே விருத்தாசலா (56)

தில்லை நக ரூசி நடு சென்னி சிறு வீட்டிலையா
தொல்லையிறப் பிறப்புந் தொலைக்காயோ, — அல்லலற
நினைக்க முத்தி அருணை நிமலா விருத்தகிரி
தனையுரைக்க விருத்தாசலா (57)

நிமலா நெடுமாலு மயன்தேவ ரும்பர் பணி
அமலா அம்மை வரலாம் பிகையாள், தமதிடையில்
வைத்தவா வாத வூரையருக்கு மப்பருக்கு
மெய்த்தவா விருத்தாசலா (58)

அப்பருக்கும் ஞானசம்பந்தருக்கு மருளீய்ந்து
செப்பரிய சுந்திரற்குந் திருடிதந்தீர், — கற்பகத்தில்
கல்லா லருட்குருவே கருணையொடு தூங்க
சொல்லாயோ விருத்தாசலா (59)

தூங்கவைப்பாய் துவாத சாந்தத்தின் வெளிமுழுங்க
நீங்கவைப்பாய் நினைந்து நான் வாடாமல், — பாங்காக
அறுவீட்டையுங் கட்டி ஆனந்த தில்லைநகர்
திருவீட்டில் விருத்தாசலா (60)

ஆனந்தத் தேனமுதே ஐவர் சுடுகோடேமர்
யீனந்துன் மார்க்க மிடுகின்றார், — நானெந்த
வழிபோவேன் கருனை மார்க்கந்தந் தாண்டுகொளு
மழியுமுன் விருத்தாசலா (61)

ஆண்டு நூற் பழகி அன்படிமை செய்தாலும்
நீண்டமன மாயை யிறக்காது, — தூண்டா
அருள் வெளியுண்டாகி ஆடுந் திருநடனப்
பொருள்தா விருத்தாசலா (62)

திருநடன மாடுந் தியாகரே தினந்தோறும்
இருள் நடனமாடு மிது மெரித்து, — அருள் நடனம்
ஆடுந்திருநோக்க மாவா யென்னுள்ளே
பாடும் விருத்தாசலா (63)

பாடும் பல் விஷயம் பல் ராக முசிதமென
நாடும் நினைவதனை நாடாது, — தேடும்
திருச்சிற்றம்பல வீட்டில் தியானித்திருக்க
குருச்சித்தம் விருத்தாசலா (64)

சித்தமற்ற ஆதி சிதம்பரத்தை சிரமல்கும்
உத்தரகோஸத்ததி சியத்தை, — நித்தியமும்
மறவா வருள்தேக்கு மவுன வீடளிப்பாய்
இறவாது விருத்தாசலா (65)

தேக்குந் திருஞானந் திருச்சிற்றம்பல வீட்டில்
பார்க்கும்படி நல்ல பரிசளிப்பாய், — நீக்கும்
நீசமெலா நீக்கும் நித்திய சுப சந்தோஷ
மீசனே விருத்தாசலா (66)

நித்திய சுபமங்களஞ் செய்நிருத்தர் திருமுதுகிரியூர்
பத்திபுரி சிவபுண்ணிய தீர்த்தத்தில், — சித்திபெற்றார்
சித்த ரரிபிரம்மர் தேவர்களும் பல தீயோர்
முத்தி வழி விருத்தாசலா (67)

பல பலவாம் தீதில் பழகும் பொய் நெஞ்சத்தால்
உலகிலுனையுணருவ தரிதாகும், — மல மூன்றும்
கெடுத்து முத்திக் கொடுக்கும் கேடிலா மூர்த்தியே
அடுத்துவா விருத்தாசலா (68)

வாராயோ மாத்தானை மருட்டு மான் மழுவுலா
ஆராரோ யழுது முத்தி பெற்றிருந்தார், — தாராளும்
மன்னரும் பிடிசாம்பல் வாழியருட்சோதி
என்னுளாய் விருத்தாசலா (69)

என்னுளா யெழுமுதைய இன்பசுகப் பெருமையே,
முப்பாணில் முன்னாப் முளைத்த முதல்வனே,- மன்னுகின்ற
புருவனடு விளங்கும் பூரணமா மணி விளக்கே,
அருவமே விருத்தாஜலா (70)

மணி விளக்கை யேற்றி மாணா வென்றரு கிருத்தி
பணி விளக்கைத் தூண்டிப் பரவசமாய்,- அணி விளக்கை
கண்டு பரிசுத்தனாய் கனவாதி நனவற்று
தொண்டு செய்ய விருத்தாசலா (71)

நனவு நினைவற்ற நாலாம்படி பூமி
சினவரவு மனந்தீய்ந்த திருவீட்டில்,- சனகாதி
பெரியோர்கள் சென்ற பேரின்பவீடு பெற
சிறியனுக்கும் விருத்தாசலா (72)

வீடு பெற்றாற் குண்டோ வீய்புரவும் புலை கோரம்
பாடு பட்டாற் கன்றோ பரம பதம்,- நீடுபெற
வாழ்ந்தாரார் புவியில் மண் பெண் பொன் மலவிழியால்,
தாழ்ந்தார் விருத்தாசலா (73)

தாழ்ந்தார் தவமற்று தரணி புகழாசை பெற்று
வாழ்ந்தா ருன்னாமம் வசனிக்காமல்,- சூழ்பிறவி
ஆசை வழக்கிடு வாரவர்களார வெனக்கேன்
ஈசரே விருத்தாசலா (74)

ஏனென்பாரில்லை யெனக் கேமரிழிவாலையோ
தானெனும் பொய் ஜடப்பீடால் தத்தளித்தேன், நானெனும்
[போர்
வேண்டாமெனக்கு வேதரே வுனைவேண்டும்;
வேண்டுதலீ விருத்தாசலா (75)

வேதரேயிடை விடா விண்ணப்பம் தினம் புரிந்து
மாதவங்கள் செய்து மதியுள்ளவனாய்,- தீதற்ற
மோக்ஷமு முன்னான்கு மீரெட்டுங் கட்டும் வெளி
காட்சியும் விருத்தாசலா (76)

வெளியில் வெளியாய் விளங்கும் பேரின்ப சுகம்
ஒளியிலொளியா யுயர் மூலம்,- தெளிவாக
ஆறு தெரு வீடு மன்பாகப் பூசிக்க
ஆரூரா விருத்தாசலா. (77)

ஆரூரம் பலமு மவகாசிப் பெருந்துறையும்
பேரூரும் கச்சி சீர்காழிசம்பை,- வார்காசி
காஞ்சி யேகம் பம்காளத்தி கருணை லிங்கம்
கொஞ்சும் விருத்தாசலா (78)

ஐம்பு ஜகநாதம் தஞ்சை திருவிடை மருதூர்
கும்பகோணம் புலியூர் கோகரணம்,- நம்புமின்னம்
ஆடுதுறை மதுரை அரத்துறையு மாவிடையார்
பாடுதுறை விருத்தாசலா (79)

விடையூர் கடையூர் வேதாரணங் கருவை
இடைக்காடருணை திருமாந்தூர்,- உடையோய்
வாத வைத்திச்சுவரம் மாயூச்சுரம் மயிலம்
வேதவூர் விருத்தாசலா (80)

வேதனே வேலூர் விருப்பாச்சி வேணுபுரம்
நாதனே நல்லூர் நாவலூர் - போதகம் பெய்
திருவெண்ணை நல்லூர் திருப்பா புலியூரும்
குருந்தையும் விருத்தாசலா. (81)

போதகமே பிரமாபுரம் புல்லங் குற்றாலம்
சேதுபதி ராமேச்சுவரம் திருவை,- பாதூகார்
திருவாலூர் தோணிபுரம் திருச்செங்கோட்டீச்சுவரம்.
திருவுளமே விருத்தாசலா. (82)

பாதுபுகழ்த்தநா ரீச்சுவரம் பா முத்தி
மாதுமணவூர் திருமழுவாடி,- ஆதிசத்தி
கோபுராபுரங் குன்றம் குற நாடுங் கொடி முடியும்.
பாபநாசம் விருத்தாசலா. (83)

குன்றங் குடந்தை கோகணகங் குறிஞ்சி.
மன்றுள் திருக் கழுகுன்றங் கடந்தை,—என்றும்
ஆதிசிதம்பரம் அனந்த ஐயனத் துறையும்
சோதியே விருத்தாசலா. (84)

சோதி அருணாசலம் சோளேச்சுரந் தூருத்தி
நீதி திருக் கொல்லி திருக்காளம்,—ஆதி
திருவான்மியூரும் திருக்கச்சூர் திருவாலம்
திருநடனம் விருத்தாசலா. (85)

திருநடனமெங்கு மின்னந் திருப்பாபுலியூருந்
திருக்கரை திருவாசி திருப்பதியும்,- திருவிரும்பை
திருக்கோணம் பருபதமும் திருவச் சிறுபாக்கம்
திருயிடைச்சுர் விருத்தாசலா (86)

இடையூர் கேதார முறையூர் திருகொடித்தான்
கடையூர் திருப்பாழையூர் காவிரியும்,- விடைபாகா
பூங்காவனமும் புத்தேளூர் திரிபுரமும்
தேங்காமல் விருத்தாசலா (87)

தேங்கா திருப்பாசூர் திருவிளம்பூர் திருவெண்பா
பாங்காகுங் காளஸ்திரி வொற்றியூர்,- ஆங்காங்கு
அரனே பரனே அரகரா சிவா வென்பார்
சரணம் விருத்தாசலா. (88)

என்று மிருப்பா ரழியா ருன்னன்பர்
நன்று பாலிக்குந் திருவோணம்,- குன்றம்
திருவதிகை திருவீரட்டானந் திருச்சாழல்
திருக்கூடல் விருத்தாசலா. (89)

கூடல் திருத்தூங்கானை குற்றாலந் திருக் கொறுக்கை
ஆடல் திருப் பாடலுந்த னருளடிக்கு,- தேட நடு
திருப்கண் டீச்சுவரம் திருமுருகன் பூண்டி
ஒருத்தனை விருத்தாசலா (90)

ஒருவனே யுன்னை உருக வன்பற் கறிவருளி
திருத்த மிடுந்திரு வெருக்கம் புலியூர்,- அருத்தமிலா
திருக்குரங்காடு துறை திருத்தேவன் குடியூர்
திருவியலூர் விருத்தாசலா (91)

தேவனே சென்னி மன்னுந் தேசிகரே திருக்கடுவாய்
மூவருந் தேடுந் திரு முல்லை,- ஆவலாய்
போற்றும் பூங்காவனமும் திருவாரைத் திருப்பாழி
எற்றுவார் விருத்தாஜலா. (92)

ஏற்றுவார் மன்னு மிடபவாரூடராய்
கூற்றனை உதைத்தக் குருபரனே,- நாத்தழும்ப
பாடியு மாடிப் பணிந்தும் பரவசமாய்த்
தேடினார் விருத்தாசலா (93)

தேடும் திருக்கானூர் திருப்பைஞ்ஞீல் திருப்பாச்சி
நாடும் திருப்பாற்றுறைப் பழுவூர்,- கூடும்
அடியாருள மன்னி ஆசீர் வதிக்கும்
கொடி முடியூர் விருத்தாசலா (94)

மன்னுந் திருச்சூரமு மயானமுந் திட்டக்குடி
பொன்னுந் திருச்சாழல் திருப்புன்கூர்,- துன்னும்
கன்னிவனம் கபா லீச்சுவரமும் மாலிகாபுரமும்
வன்னி வனம் விருத்தாசலா. (95)

துன்னுந் தொழுமலமுந் திருமருகல் திருக்குடவாய்
சுன்னமுந் திருப்பாற்றூர் திருவாஞ்சி,- அன்னையுமை
இடை பாகத்தோடு முத்தி யீந்தாய் திருத்தேகூர்
உடையவா விருத்தாசலா. (96)

உடைய திரு உத்திரகோஸங் திருக்கெடிலம்
மடையனான் மறைக்காடு மறப்பனோ,- கடையனான்
அன்பர் பணிச்செய்ய ஆளாக்கி வைப்பாய்
அன்பே விருத்தாசலா (97)

ஆளாக்கும் பூந்துருத்தி அழகிய திருச்சண்பை
நாளாக்கிப் போக்காதே நமச்சிவயா,- கோளாக்கும்
பூதம் பொறியற்றுப் புலனற்றுப் பூசிக்க
போதனே விருத்தாசலா (98)

போதனே திருச்சங் காட்டுருந் திருநறையூர்
நீதி திருக் கோழம்பம் நின்றியூர்,- வேத
திருவழுந்தூர் திருச் செம்பொன் பள்ளியும்
திருவேட்டம் விருத்தாசலா (99)

வேட்டம் திருக் கிழ்வேளூர் திருப்பட்டீச்சுவரம்
கூட்டங் குருலிங்க சங்கமத்தார்,- வாட்டமிக
திருவைகல் மாடக் கோயில் பிரான்றானே
கருவை வாழ் விருத்தாசலா (100)

வாழ்வு திருமழவாடி மருகல் திருவை யாறு
ஆழ்குண்ட மழகர் திருநயினூர்,- தோழமையாய்
திருநெல்லூர் நல்லம் திருவேளூர் கூடலாற்
குருவாம் விருத்தாசலா (101)

வேளூர் விருப்பாச்சி வேணுபுரம் வேட்களம்
தேளூர் சேம பதி திருமழவூர்,- மாலுண்ட
கண்டனே யென் போலுங் காதல் கவருடல்
கண்டதில்லை விருத்தாசலா (102)

இல்லை திருவருட் கோயிலிருக்கு மிடமறியேன்
சொல்லும் புரம் பற்ற சுகம்பெறுக,- தொல்லையுடல்
அழிந்தா லுளதோ ஆதியே முதுகிரியில்
எழிலே விருத்தாசலா (103)

உள்ளதோ வூற்றையுடல் போனாலென்ன சுகம்
வள்ளலே என்னென்ன வம்பாகி,- கள்ளமல
கற்பனையே ஒப்பாய் காட்டியெனை வருத்துவது
பொற்பணியே விருத்தாசலா (104)

வருத்துவதேன் வையத்தாசையினாலேயோ
திருத்துமிடந் தெரியா தலைகின்றேன்,- ஒருத்தனே
உள்ளந் திருக்கோயிலா யிருக்க ஓடுவதேன்
கள்ளரோ விருத்தாசலா (105)

ஓடிவுழன்று உலகெலாம் நீராடி
வாடி வதங்கி வெண்பொடி யணிந்தும்,- பாடிபா
மலனாமோ நின்னடிகீழ் வாழும் பல்லாண்டு
நலமாமோ விருத்தாசலா (106)

ஆண்டு நூற் கற்ப மடைந்தாலு மாயை நோய்
கூண்டழிந்துப் போகக்குலையுதே,- நானென்று
மாண்டேபோ முலகுயிர்க ளெல்லாம் பொய்
வேண்டாம் விருத்தாசலா (107)

நானென்ற சோதி நாயகரே நம்பினவர்
தேனென்று போற்றுந் தியாகரே,- மானென்று
மருவு மல மாத ராசையிலே மயங்காத
குருதருவாய் விருத்தாசலா (108)

மயங்கு மதி கோஸ யாதி ஈரா றுகலை
தியங்கும் படிக்காதி தெய்வதமே,- பயங்கொண்ட
பத்தெழுத்தும் பங்கிட்டுப் பார்க்குமதி யாகாது
சித்தெழுத்தே விருத்தாசலா (109)

கண் பஞ்சடையுமுன்னே காலதச்சன் வருகு மூன்னே
என் பஞ்சடைந் திமுக்கம் வருமுன்னே,- பண்டுஞ்சி
பாற்கு முன் பன்னிரு கால் மேலேறிபரா பாத்தில்
சேற்காயோ விருத்தாசலா (109)

மேலேறி முன்னுன்கும் விரித்து வைத்த வீட்டிலிரு
காலேறிக் கூத்தாடிக் காண்கின்ற,- மாலேறி
மருவா திரு வாத வூராரில் நாளெருவன்
குருவே விருத்தாசலா (110)

ஒருவரென்ற மூலர் பரம் பரையி லொருவரென்று
குருவாகி வருகு மதிக்குன்றேகேள்,- திருவாழும்
செல்வமே தேவர் சேனுபதியே திருவருளை
சொல்லவா விருத்தாசலா (111)

கல்லா லருட் சபையில் காரணைன்குங் கட்டி
சொல்லாமற் சொல்லுஞ் சோதிநடு,- எல்லாம்
பார்த்துப் படைத் தழித்துக் காற்கும் பதிமேலும்
சேர்த்துவை விருத்தாசலா (112)

பொய்யூரிலே பிறந்து ஐயூரி லாசிறைய
மெய்யூரிலே விட்டு வளற்காயோ,- பையூரில்
பிறந்து யிறக்காதப் பேரின்ப முத்தி நிலம்
கறந்து தா விருத்தாசலா (113)

முத்தி நிலத்தில் மூவரும் பங்கு செய்து
சித்தி செய்து சும்மா சிரிக்காதீர் - பத்தி தரும்
பாக்கியமே நன்று பலவாம் விகாரம் மன
யோக்கியமேன் விருத்தாசலா (114)

யோக்கியமோ கவிஐயாயிரத்து முப்பத்தாறில்
பாக்கியமே பெறாகப் பாமாலே.- யோக்கியமே
மென்மேலுமாகி மெய்யடிக் கீழ் வாழ்க
பொன் போலும் விருத்தாசலா (115)

விருத்தாசல வெண்பா வேண்டு வார் வாழ்க
கருத்தாய்க் கருதினவரும் வாழ்க, விருத்தாசலா
வேதாந்த சித்தாந்த நூல் வாழ்க வென்றுன்
பாதம் பணிந்தவர் வாழ்கவும் (116)

ஸ்ரீ விருத்தகிரியீசர் அந்தாதி முற்றும்.

திருச்சிற்றம்பலம். குருவாழ்கவும் சுபம்.

PRINTED BY SRI VELAN PRESS CHIDAMBARAM.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமந் நடராஜமூர்த்தி துணை.

ஓம் ஸ்ரீ சிவசிதம்பரம்.

ஸ்ரீசிவகங்கை திருக்கோயிற்றுறையில்
ஸ்ரீலஸ்ரீ வா. கணேசமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய
திருவிருத்தம்.

ஆதியிலே ஆகாச லிங்கசோதி யம்மைசிவ
காமிஅன்பி லமர்ந்த சோதி
பாதியைப் பங்கிட் டளித்த பானு சோதி
பத்தர்திரு வுள்ளம்பா மாலைசோதி
வீதியிலே முச்சுடராய் விளங்குஞ் சோதி
வேதமுடிவிலாடும் விமலசோதி
தீதில்லா திருத்தொண்டர் தீனசோதி
சிவசிதம் பரம்நடன சோதிநீரே 1

கண்மணியில் விண்மணியைக் காட்டுஞ்சோதி
கனகசபை தன்னிற் கற்பூரசோதி
பண்மணிமாலைக் கோர்த்து பணியும் சோதி
பாமாலைத் தனிலன்பு பதிந்தசோதி
எண்மணியா யெட்டிரண்டி னடுவின் சோதி
ஏழையடி யார்களுள்ள மின்பசோதி
தெண் மணியாய்த் திருச்சிற்றம் பலத்தின்சோதி
சிவசிதம் பரம்நடன சோதிநீரே 2

அறுபத்து மூவரன்பில மர்ந்த சோதி
ஆயிரத்தெட் டிதழ்மலரி னமுதசோதி
குருபக்தியில் லாதவருள் கூடாசோதி
கொலைபுலையற்றவருள்ளங் கூடுஞ்சோதி
பருபதமாய் வளர்ந்தப்பாமாலைசோதி
பானுமதிப்பிரகாசமானசோதி
திருமூலர் திருவுளதேவர் தெய்வசோதி
தில்லைசிதம்பரம் நடனசோதிநீரே. 3

அண்டபகி ரண்டமப்பா லுள்ளசோதி
அணுவாயு மறிவரிய அரூபசோதி
எண்டிசையுஞ் சூழ்ந்த யேகாந்த சோதி
என்னையறியாம லாட்டுமெந்தை சோதி
புண்டரீகக் கண்ண னயன் போற்றுஞ் சோதி
பூரணா னந்தகுரு புனிதசோதி
செண்டால் மேருவையடித்த தெய்வ சோதி
சிவசிதம் பரம்நடன சோதிநீரே 4

மலையரசன் மகளுடன் விடையேறும் சோதி
மண்டலீகர் மகாயோகி வணங்கும் சோதி
கலையிராறுங் கட்டுங் கருணை சோதி
கண்மூக்கு நடுவிற் காண்கின்ற சோதி
அலையா புகழளிக்கும் மருமை சோதி
அடியவருக்கெளிய அம்பலத்தின் சோதி
சிலையாகி வளர்ந்த ஞான தெய்வசோதி
சிவசிதம்பரம் நடனசோதி நீரே 5

பதஞ்சலியர் வியாக்கிரமர் பணியும் சோதி
பாதிபங்கிட் டளித்தப் பரமசோதி
விதவிதமாய் விளங்குகிற வீரசோதி
வேதாந்த சித்தாந்த சமரசமெய் சோதி
இதமுறைக்குமம் மும்இம் முஞ்சோதி
இன்றுமன்று மென்று மொன்றுனசோதி
சிதராத சிந்தையுள்வாழ் தெய்வசோதி
சிவசிதம் பரம்நடன சோதிநீரே 6

உள்ளமாலய மாக வுணர்த்தும் சோதி
உமையவ ளுடன்வாழு முண்மைசோதி
கள்ளனைக் கட்டுங் கற்பூர சோதி
கரைகாணா கனகசபை லிங்கசோதி
எள்ளளவா கினுந்தொட் டார்க்கின்ப சோதி
இதுதானென் றறிவிக்கு மிறைவர்சோதி
தெள்ளுதமிழ் பாமாலைச் சூடும் சோதி
சிவசிதம் பரம்நடன சோதிநீரே 7

ஆலத்தை அன்பருக்கா யுண்ட சோதி
அயன்மாலு மடிமுடிகா ணாதசோதி
காலங்கள் பல்லூழிக் கடந்த சோதி
காலனைக்கா லார்க்காய்ந்தக் கடவுள்சோதி
நீலமணி வாலைகுருசுவாமி சோதி
நெற்றிக் கண்ணைத் திறக்கும் நேசசோதி
சீலமருட் சோதிபரஞ் சிவத்தின் சோதி
சிவசிதம் பரம்நடன சோதிநீரே 8

சுந்திரற்குத் தூதான சுருப சோதி
சோமசுந் திரராகிற கெடுத்த சோதி
மந்திரதந் திரஞான மவுன சோதி
மணிவாச கர்க்குமண் ணெடுத்தசோதி
கந்தருடன் கணபதியு மீன்ற சோதி
காலைகையில் வில்லடியுங் கொண்டசோதி
சிந்தா மணிஞான தெய்வ சோதி
சிவசிதம் பரம்நடன சோதிநீரே 9

ஒப்பில்லா யோங்காரத் துள்வாழ் சோதி
ஒன்றுக்கு ளொன்றாகி யொடுங்குஞ்சோதி
எப்படியு மீடேற்று மெந்தை சோதி
யிறப்பும் பிறப்பழிக்கு மீசர்சோதி
அப்பர்நால் வர்போற்று மாதிசோதி
அந்நாளி லருவுருவா யமர்ந்தசோதி
சிர்பபரசி தாகாசத் தெய்வ சோதி
சிவசிதம் பரம்நடன சோதிநீரே 10

கால்மாரி யன்பர்சிர மாடுஞ் சோதி
கயிலையங் கிரிகாட்டுங் கனக சோதி
மால் ருத்திர னயன்மஹே சுரநற்சோதி
மனோன்மணி சதாசிவமாய் மருவுஞ்சோதி
பால்போ லுளத்தார்கள் பார்க்குஞ் சோதி
பாழ்மூன்றுங் கடத்திவைக்கும் பரமசோதி
சேல்விழி சிவகாமி யுடன்சிறந்த சோதி
சிவசிதம் பரம்நடன சோதிநீரே 11

திருச்சிற்றம்பலம்.

உ

ஓம் குருவே துணே.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ கைலாசம் ஆயிரத்தெட்டு சிவலிங்க க்ஷேத்திரத்தில் மகா மகத்துவமான ஷ‍ி சப்தரிஷித்துறை தேவாலயம் ஸ்ரீ சிவபெருமானது தேவாரத் திருப்பதிகம்.

திருப்பிரமபுரம்.

பண் - சுகவனம்:

திருச்சிற்றம்பலம்.

தொழு மல முதுகதி சுவர்ணிய னுரை முறை
தொழு மல முதுகதி சுவர்ணிய னுரை முறை
தொழு மல முதுகதி சுவர்ணிய னுரை முறை
தொழு மல முதுகதி சுவர்ணிய னுரை முறை

சுவர்ணியனென்பது சுகவனனுரை முறை என்க

(இ-ள்) முது-பழமையாக பல்லாண்டு வாழ்த்தும், கதி-நான்கு பதவியாகி, சரிதை, கிரியை, யோகம், ஞானம், தரும், மேலாகிய சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுஜ்யத்தைப் பெறும், முறை, முறைப்படி வேதங்கள் நியமித்திருக்கும் ஒழுங்கின்படி மலம்-மூவாசை குற்றங்களாகிய, தொழு, பசுவெனும் சகலாவத்தையாகிய மனேபாசமற, சுகவனம்- மேலாம்பதவி சுகத்தைக் கொடுக்கும் அழிவற்ற கற்பகத்தரு நிழலின் வனம், வழியை, உரை, நன்மைமிகுந்த மொழிகள் பருகி இனிக்கும்படி கடவுளை சொல்வீராக.

மலம், -முப்பொருளாக விளங்கிவரும் மஹாவாக்கியார்த்தமாகிய முமூட்சு வஸ்து பொருளானது, முது,- முதிர வளர்ந்து புதிதாக மலர்ந்த சச்சிதானந்த, கதி-பரிபூரணத்தை, சுவர்ணியன்-சுகவனமென்ற ஊரிலிருப்பவன், உரை-சொன்ன வசனத்தின்படியே, முறை-ஒழுங்கெனவே இரு என்று மனமானதை தொழு-நீவணங்கென்றுன்.

பின்னும் முது;- மூன்காலவரையற்ற ஸ்ரீ கைலாசமரபாக' மலம் - மூன்று பொருளாக இதயாம்பரத்தில் பதிபசு பாச விளக்கமாகி உசுவாசநிசுவாச நினைவுருபிகராக தனது மாணுக்க ராகுக, உரை, முறை, சொல்லிவந்த சகுணோப தேசிகரான சுவர்ணியனுகும் தலைவன், கதி-முன்சொல்லிய நான்கு முத்திப் படியி னிலக்கணங்களை வணங்குக வென்று சொல்லாமற் சொன்னவராகஉபதேசமீய்ந்தருளத்தொழு,மல,ஷடி மலபரிபாக முள்ள பசு,தொழுவத்தில் பிறந்த,சுவர்ணியனனவன் முது,கதி-மேற்கூறிய நான்கிலக்கணங்களை அடையும்படி, உறை-முறை சொல்லி துதி செய்தாம் என்றவாறு)

திருப்பிரமபுரம்.

திருச்சிற்றம்பலம்

—

பேசிற் பிரமபுரம் பிணக்குகாணம்மானை
பேசிற் பேசாதிடமு பிரபலங்காணம்மானை
ஆசிகூருமவ் வந்தணர்க்கு வம்மானை
ஆனந்தங்காட்டு மம்பலங்காணம்மானை

மூசையிற்சோதி முளைப்பிடங்கண்டம்மானை
முக்கண்ணர்சிரிக்கு முப்புரங்காணம்மானை
ஆசைமலமருக்கு மர்ப்புதவிடம்மானை
அறியுப் பிரமபுர மங்கலிங்கமம்மானை

மாரிதினமாடும் வான்கைலை அம்மானை
மன்னும் பிரம்புர மாதேவரம்மானை
பாரித்து அண்டபிண்டம் படைப்பர்காணம்மானை
பண்மலராலேற்ற பவம்போகுமம்மானை

வெற்றிசங்கொலிவேதக் கூடொளிகாணம்மானை
வேதன்மாலுண்டினித்த விதங்காணீரம்மானை
பித்தன்பிரமபுரப் பெருந்துறையானம்மானை
பிறப்பிறபருக்கும் பிஞ்சகன்காணம்மானை

மத்தமும் மதியணியு மாண்டவர் காணம்மானை
மாதொரு பாகத்துடைய வாகீசரம்மானை
புத்தமுதமூரும் புண்மலம்போமம்மானை
போற்றுவர் பொல்லா வினையகலு மம்மானை.

சிரித்துப் புரமெரித்த தேவர்கா ணம்மானை
கரித்துயில் தனைப்போர்த்தக் கடவுள்கா ணம்மானை
திரித்தித்தி யெனயன்ப ருளம்நடிப்பா ரம்மானை
பாரித்த பிரமபுரம் பரமர்கா ணம்மானை 6

மூத்துமர கதசோதி மூர்த்திகா ணம்மானை
சித்தெல்லா வற்றிற்கும் தேவர்கா ணம்மானை
வ்த்துவி லுயர்ஞான வஸ்துவென்பா ரம்மானை
அத்தனர் பிரமபு மாண்டவர்கா ணம்மானை 7

அறுபத்து மூவர்குடி யாண்டவர்கா ணம்மானை
மறுபத்து நமகுடியு மாளுவர்கா ணம்மானை
கருபத்து மில்லாமற் கார்ய்யவர்கா ணம்மானை
பெருபற்றுப் பிரமபுரம் பித்தன்கா ணம்மானை 8

பித்தனர் பிறையணிந்தப் பெருமான்கா ணம்மானை
பித்தனா பெருமசோதிப் பெரியவர்கா ணம்மானை
பித்தனர் பேயோ டாடியவர்கா ணம்மானை
பித்தனர் திருப்பிரமா புரத்தன்கா ணம்மானை 9

ஆண்டநா யகியிடையில் வைத்தவர்கா ணம்மானை
மாண்டாரை எழுப்புமருந் துடையா ரம்மானை
தூண்டா மணிச்சுடராய்த் துன்னுவர்கா ணம்மானை
காண்டா மணிநாதம் பிரமபுர மம்மானை 10

திருச்சிற்றம்பலம்.

——

௳

திருக்கூடலாற்றுத்துறை,

பண், பியந்தை, காந்தாரம்.

திருவெண்ணிலவு காயத் திகழிந் திறைசெடிந்த சிகையேரு
மொரு செஞ்சடைகுலாவ னுமையின் விடைசுமந்தவுடற்கோல
மருவுங் கலையணிந்த மணிமூன்றலர்ந்த கூடலாற்றுக் கோயிற்
குருவுஞ் சீடனைப் முன்குழறுங் கோலமுற்றங் கூவு மாரே

காலங் கலிகலாபக் கோலங்கவிய நெஞ்சங் களவாடு
மாலங்கொவிரநாத சீலஞ் சிதையவாதி சிவனே வுன்
ஜாலஞ் சலிய கோபக்கூரம் பெரிய சந்திகுலா சோதி
சேலைம் புலன் குவிந்ததே வுன்கூடலாற்றுத்துறை கோயில்

தேவுன் கூடலாறுங் குளிர்வெண் மதிசிவந்த சடைகோணீ
மாதுன்னிடை பிரங்க மாவெண்டிசை விளங்க மலவேழிஇ
தோடுள் சுருபரூபஞ் சுகசங்குளிரவூதி சுவாமிபாதம்
ஏடுன்களிரவோதி எமதூர்பொடியுங் கூடலாற்று கோயில்

ஓதானுயர்ந்தகோயி லொருமால் வரையகண்ட முழரியூரும்
வாதூர்ந்தயன் கிலாசமறையே டெழிா தேடுஞ்சிவனே யென்
பேதான் பிலிர பேசும்பேய் பூதங்கள் பாசப் புலனுறும்
சூதான்தொடுமுபாரத் தொழுமாறழ யென்னைப்பன்பாடுமாரே

தோடுன் மருவிதாதுச் சுவைபத் தொலிந்த சீவன் சுகஜீவி
ஏடுன் கவியும்பூத மிலகுங் கருணை கூடலாற்றுக் கோயில்
நாடுன்லதிந்த பாதம் சரீலென்றிசைய நாயிற் சடையாவே
னீடுன் பணிகளேற்க நினைமின் கடவளெண்ணீரிடையாரே

எக்காலமுமெனது யிதயங்குடியுமாகி இருந்தாண்டு
நக்காலமுமின்று என்றுநவின்று மன்றுணடமாடு
மக்காலத்தைநாடி அப்பா யெனது அப்பா அண்ணவென்று
இக்காலமுமாக யேண்மை பங்கின் கூடலாற்றுக்கோயில்.

தொழுவாருள் எந்தூய்மையாக்குங்கூடலாற்றுக்கோயில்சுவாமி
பழுதொன்றணுகிடாதுப்பத்தனுக்கிப் பார்வை மூன்றுக்கி
நழுகிடாது நந்திமீதிலேரிவந்து நன்மைகுன்றிடாதுகலமாக்கும்
பொழுதும் வீணுமின்றிப் பரிபூரணத்திற் புனிதர்பொன் றுவே.

என்னுளோர்ந்துபூத மேகமாகிப் போற்றி யேற்றுதுன்
முன்னுள் முன்னுமாகு முச்சுடர் முழக்க முழங்காதென்
பன்னுட்புரிந்த சஞ்சிதப் பிராரத்தவினைகள் பாழாக்கும்
துன்னுந்தொண்டர் போற்றுங் கூடலாற்றுக்கோயில்
சுகசோதி.

நாரும்பூவுமாகி நானுநீயு மாகி நடுஞாயிறு விளங்கிநலமாகும்,
ஊரும் பேருமின்றியுற்று ருவுமின்றி யுனதன்பர்கணுடுமூர
வொன்றே,
சேருந் திருத்தொண்டர்கள் தொண்டாய் விளங்கும் ஞானசிவ
யோகப்,
கோரும்படியும் ஞானநற்குணமுமாகுங் கூடலாற்றுக்கோயில்.

சித்தர் பணியும் வசிட்டநதியும் திரிமணிமுத்த நதியுடனுஞ்
[சேர்ந்தாதி,
முத்தர் நாவ்வரோது முக்கண்மணிவிளங்கு மூவாயமூர்த
[முழுசோதி
பத்தருளம் பிரிந்திடாதுப் பரிதிமதிக்கோடா கோடி ஞானப்
பிரகாசப்,
கர்த்தருமையவளுபன்பருடன் வருகுங்கூடலாற்றுக் கோயில்.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணாகடம், கடந்தை, திருத்தூங்கானைமாடம்.

பண், பழத்தக்கராகம்,

திருச்சிற்றம்பலம்

நடுங்குமிறக் பிறப்பு நலிகோ ளென்றவை நகைத்தாயடியவர் குழாங்கவே
விடமுண்டமுதளித்த யெம்பிரான் வித்தகம் வளரவிண்ணிறையநின்று
சுடர்வெளி விண்டு சுருங்கதோய் சுருதிகடூற்றும் தூங்கானைமாடம்
கடந்தைவா ழெம்பெருமானையே கருதுமின் காருலகீர்களே.

சிந்தியேனுள்ளஞ் சிதையசிரிக்குர் திருத்தூங்கானை மாடத்துளானை
சந்தியேனக மெழுகாய் மயிர்சிலுக்க சாந்தியொன்றில்லை தன்படையேற்று
முந்திவாதவூரடிதொழ நரிபரிமுயங்க பாண்டிநன்னகர் வந்த முன்னவன்
எந்தைபெண் ணாகடத்தெஞ் சிவனையே யிரைஞ்சுவ ரிறப்பிறப்பற்று வாழ்
[வரே

கண்களிரஞான கலாலய மூலைக்ககழறு நின்னுமங் கருத்தனே கருணை
பண்களிர வுன்னைப்பாடிப் பரவுவார் பல்லாண்டு வாழி பத்தருமுத்தரும்
எண்களிர எல்லாமா யெவ்வுயிருமாகி யிருக்குங்கடந்தை தூங்கானைமாடம்
விண்ணோரு மண்ணோருங் களிக்குமெம்பெருமானை வேண்டுவீருலகீர்
[மேலவரே.

ஏங்கியிளைத்து யிறைஞ்சி நெஞ்சுருகி யிடையரா தென்னப்பனெஞ் சிவனு
[ரையே.
தூங்கித்துகளறசோர்ந் துளமூர்நலி துடைக்குந்தூங்கானைமாடத் துளானை
தேங்கித்தெளியத் திருப்பாபாடி தேவனைத் தேடித்திரிந்து பரவுவார்
ஓங்கிப்பல்லாண்டு வூழற வாழ்குவாருமை யிடைப்பங்கனை ஓதுமினுலகீர்.

வந்தியேன்மனம் பஞ்சபூதங்கள் நகைக்கும் வஞ்சனையினல்வாடி
புந்தியிலைமையாய்ப் பரிபூரணனந்தத் தூங்கானைமாடத்துப் புண்ணியனுன்
இந்திரஜாலத்துலக வேடிக்கையிலே மாரிடாதிறப்பிறப்புமின்றி
சந்தித்துப் போற்றித் தானுகுஞான சச்சிதானந்தச் சமரசமே

என்னுளஞ் சிவாலயமாகி யிராப் பகலின்றி யென்றுமேற்றுதற்கு
பன்னுளமின்றிப் படம்போலிருந்துன் பத்தர்முத்தர்கள்போற் பணிய
தன்னுளம்ஞான சற்குருவாகிச் சச்சிதானந்த சமரசமெய்
துன்னுமானந்ததூங்கானைமாடத்துட்சுருபசாட்சாதகாரச்சோதியொன்றே

திங்களையணியுஞ் செஞ்சடையு மழுமானுமேந்துந் திருக்கரத்தோன்
கங்கை சென்னியிலும் காலில் மிதித்தமுயலகனும் கருணைமூன்றுடையக்
[கண்களுடன்
மங்கையுமை பார்வதியிடையினவமணிமாகதமணி வொளியாய்
அங்கையிற்கனியா யன்பருணடிக்குங்கூடந்தையெம்மப்பனை அறிவதென்றே

நாடியநாட்டம் நன்றுகநாசிமுனை வட்டம் நவமணிசுடர்கடுன்ன
கூடிக்குன்றேறித் திருத்தொண்டாறுபத்துமூவர் கூட்டத்துடன்
பாடிப்பாமாலைப் பன்மலர்சூடி பல்லாண்டு வாழ்த்திப்பணிவதற்கு
தேடுவீர்தேகமழியுமுன் திருக்கடந்தைவாழ் சிவபெருமான் கழலே.

சித்தந்தீஞ்சுவைத்திருத் தூங்கானைமாடத் துச்சிவபெருமான் திருமலரடிக்கு
பித்தாய்ப் பிதற்றிபேசி யென்றும் பிறப்பிறப்பகலப் பேயோடாடியபெருந்
[தகையை
முத்தே மாகதமாணிக்கமே வைரமே சோதிவிளக்கொளியே ஞானமுதல்வ
[னென்று
வித்தகாவேதத்தலைவனேயென்று வேண்டுவீரொன்றும் நமதுவினையாவே.

சித்தசனெனும் பெரும்பேயுடன் தூங்கக்கோனுன் வலைக்குட்சிக்குப்பட்டு
பித்தனுர்நாமங்கனவிலுமுறையாதுப்பீயங்கம் வளர்க்கப்பெரும்பாடுபட்டீர்
குத்துக்கோல் வாளுடன் கூற்றன்வருகக் கூறுவதென்னே குறையெலாந்
[தீரக்குருபானின்
புத்தேனமுதூரும் பூபதம் போற்றியேற்றுவீர் நல்லபுத்தியிதென்றுப்
[பூவுலகீர்

திருச்சிற்றம்பலம்.

—

உ

திருநெல்வாயில் திருஅரத்துறை பண்பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்.

தந்தை யெல்லாவுயிர்த் திரளாய் தழுவித் தக்கன் தலையெரித்த
அந்தமில்லா னென்னகத்தே அறிவானந்த நடமாடிச்
சிந்தைக்கரசாய் கருவிகளைச் சிதைய சிறித்துளந் தேங்காத
எந்தை திருநெல் வாயிலரத்துறை யெஞ்சிவனைத் தேடுமின்னீர். 1

நீடுநிவாநதிக் கரைமேவும் நீத்தன்கழலை நினைதோரு
மேடுமெண்ணீரகலாத இன்பம் வந்துய் முன்னுலகீரே
பாடும் பரவும் பல்காலும் பல்லாண்டெடம் பெருஞ்சிவனையே
தேடவல்லீ ரேங்கியிதந்தெளியத் திருவரத்துறையினையே. 2

ஏதமிலாரெம் பெருஞ்சிவனை யிறைஞ்சுவ ரேக்கமிலாருழின்
வாதமிலா ரிருவினையின் வழக்கிலார் வாய்மை நோன்பகலார்
சீதரன் மாலயன் தேக்கித் தினந்தேடும் திருவரத்துறையானை
போதம் வளறப் பாடுவார் பொங்கும் பிறவிநோயறுப்பாரே 3

இன்பம் பொங்க என்னிதய மெண்ணீர கல-யெந்தைநடம்
அன்பர் குழைய ஆடிபாடு மரத்துறை மேவும் அப்பனையே
துன்பம்பொடிய தொழுவாருள்ளஞ் சுருதிசுடூற்றும் சுகம்விளையும்
நண்பனடியார்க் கடிவருடி நாத்தழும்பப் பாடீருலகீரே. 4

கருணைவிளையு மரத்துறையென் கடவுளை வாழ்த்தி வணங்கவே
இருணெறிந் தின்பமிதமல்கு மெங்களப்பனை யிறைஞ்சுமுனே
மருணெறியுடையீர் வாய்மையிலீர் வாழ்வீராதிப் பிரானைபாட
அருணெறியுடையோ ராவீரெங்களம்பலக் கூத்தனை அறிய வல்லீரே. 5

தேக்கியென் சிந்தை சிவபெருமானே திருவரத்துறை தேவர்தேவனே
நோக்கமூன்றுடை நுதலுடை வாழ்வே நூங்கனேனுள மாகிய பொருளே
ஏக்கமொன்றிலே னென்குறை யெவர்க்குண்டெந்தை நின்னடி புகுவார்
தூக்கமொன்றிலார் துன்பிலாரந்தோ சோதியே தொழுமலரடிநரே 6

காண்கைலாய வரத்துறையென் கண்ணுதலானைக் கருதுகவே
மான்மழுசூடுமை பங்கனை மதிபிறையரவணிச் சிவனையே
பூண்பணியம்பலக் கூத்தனை பொங்கிப் புளகப் போற்றுவ
ரூன்பதியோடு கோவண மொண்ணகைக் காண்ப ரழியாரே. 7

முன்முதல்சோதி மணிவாயல் முழங்க நடமிடுஞ் சிவனையே
தன்னொளியீருயிர் கலந்திருளைச் சடியத் திருஞேக்கருள்புரிந்து
என்னகங்குழைய குடில்புகுந்தா ணிறைந்து கண்ணீர் மல்கினை
அன்பர்க் கமுதமழைதூவ அவமகன்றரத்துறை மேவுவரே. 8

எக்கமிலேனினை விம்மி விம்மி எராராத்துறை மேவுமப்பனை
தேக்கி யாராவமுதாகி சிந்தைப்புடைய சிதைந்தேற்றி
தாக்கமற்றூழுயிர் துன்பம்நீங்கச் சோதிமணி நிலாமாடகூடல்
நீக்கமற்றெங்கும் நிறைசிவனை நினைமின்தோறும் நித்தியமே. 9

நிலவுருவானை நீற்றைம்பை மலரணி நீவாநதிமேவுங்
குலகுருவானவன்றன்னை குலாத்தில்லை குலுங்க நடிக்கும்
அலர்மதி பிறையணி சிவனை அப்பனை அரசைப் பாடிப் பரவ
மலமொரு மூன்று மரிக்க மனுவென வந்து வாழ்வாரே. 10

திருச்சிற்றம்பலம்.

——

உ

திருச்சிற்றம்பலம்.

தனது மாயாவிசாரம் இன்னமும் நீங்கவில்லையென்று
வசிட்டகுருவாகிய வைத்திலிங்கத்தை

ஸ்ரீமத் கணேசமூர்த்தி சுவாமிகள் பிரார்த்தித்த விண்ணப்பம்

திருமஞ்சத்துறை. திருத்திட்டக்குடி.

நாட்ட ராகம். பண்.

குருபராகுணங்குடியுமாகி யென்குடியும் வாழ்ககுலதெய்வமாய்
வருபவருன்னையன்றியார் மாயாவிசாரமொழிந்தழிந்திட
திருவபஞ்சாட்சரம் விளங்கிடத் தாண்டிடா சோதித்துய்யனென்
சிருமைநீங்கியுன் பெருமையீய்ந்திடுந் திட்டக்குடியில்வாழ் தெய்வமே,

ஒன்றவொன்றுமெ யாடுங்கி வாழ்ந்திடுமுத்தமருள முயர்ந்தவா
நன்றுபெருகவும் நடுவில் வாழ்கவும் நாயினுங்கடையவனையே
கொன்றுதின்றிடுங் கோளற்கூட்டத்திற் கூடிடாதாளுங் கொற்றவா
தென்றல் வீசிடுந் தேன்சொரிந்திடுந் திட்டக்குடியில்வாழ் தெய்வமே

வருந்திலேன் மண்ணில்வந்தசீரடியை மாபெரும்பாவி வஞ்சனுன்
பொருந்திலேன் பரிபூரணத்தினிற் பொழுதுபோக்கிடா புலையனுன்
குருந்தை வில்வமருகணியுஞ் சற்குணங்குடிக்குருநாதருன்
திருவருட் சிந்தையொன்றளியுந் திருத்திட்டகுடியில் வாழ்தெய்வமே.

மூத்தனே முத்தர் கர்த்தனே முழுமூடனுயினுங்கடை மூர்க்கனே
அத்தனே சிறுகாலையில் ஸ்ரீராமகுருவெனவந்தாண்டவா
பித்தனே பின்கலை யிடகலைப்பிரித்துக் காட்டிடும் பெற்றவா
சித்தனே சிற்றம்பலத்தனே திருத்திட்டகுடியில்வாழ்தெய்வமே

தேவாதிக்குத்தேவனே திருமூலாதிக்குறிய செல்வனே
மூவராதிக்கு மூர்த்தியே முப்புரமெரித்ததோர் மூலனே
காவலொன்பதுங் கட்டியே கடுங்காலன் வந்திடா கர்த்தனே
சிவநாயகசோதியே திருத்திட்டகுடியில்வாழ் தெய்வமே

சோதிநற்சுகந் தொண்டருக்கருள் தூண்டிடா யருட்சோதியே
பாதியுண்டிடும் பார்வதியிடையில் வைத்ததேசசுப்பரமனே
நீதியேநிஷ்களங்கமே நிராமயதாகிடும் நிர்த்தனே
தீதில்லாதிருச்சிற்றம்பலவனே திட்டக்குடியில்வாழ் தெய்வமே.

எரித்திடும்நெற்றிக்கண்ணனே யீராறுதலத் தரசரீசனே
பிரித்திடும் பீசகோசப் பின்னலைப் பிறையணிந்திடும் பித்தனே
மரித்திடுந்தால மறலிவருகுமுன் மாசிலாதீட்சை மவுனமே
சிரித்திடுமுகந்தோன்ற தேடிவா திட்டக்குடியில் வாழ் தெய்வமே.

சொரிந்திடுமமிர்த மாயிரத்தெட்டிதழ் மலரினற் சுவாமியே
எரிந்திடுங்கும்பிபாகம் வீழ்ந்திடாதீனனைக் கரையேற்றிபே
பிரிந்திடாதினதுப் பெரியதிருமலரடிக்குப் பிரியம்நன்ருகவே
திரிந்திடுஞ்சிந்தை விடமருத்திடுந்திட்டக் குடியில்வாழ் தெய்வமே.

விடமுண்டகண்டவேதநாயகா வித்தைப் புத்திமெய்ஞானமே
கடமழியுமுன் ககனவட்டத்தின் காட்சியிற் கருத்தூன்றியே
மடமனதினுல் மாய்கையிற் சிக்கி மாய்ந்திடா வாமருளவே
திடமருட்சிந்தைதேக்கி போற்றிடத்திட்டக்குடியில்வாழ் தெய்வமே.

ஈய்ந்திடுமேண்மைபங்கனே அசனும்பிகை யிடையுடையவா
சோர்ந்திடாதொண்டருள்ள மேவிடுந்துய்ய தேசிகச்சுருபனே
கூர்ந்திடுந் திரிநயனமளித்திடுங் கொன்றை மலரணியுங்கொற்றவா
சேர்ந்திடுந்திருக்கூட்டம் நழுகாது திட்டக்குடியில்வாழ்தெய்வமே.

திருச்சிற்றம்பலம்.

——

உ

திருச்சிற்றம்பலம்.

திருவாடுதுறை

ஆதியந்த மானநடு வாடுதுறை மேவுஞ்
சோதியந்தமான குருநாதனையே போற்றி
வேதியறுபத்துமூவர் வேண்டி தினமேற்றுங்
காதியிதங்களவ குற்றமியாவும் பொறுத்தாரே. 1

குற்றமினங் குணங்குடி கொண்டாடு துறைமேவி
நற்றமிழ் பன்மாலை பத்தும் நாறுமணம்வீச
புத்தமுத ராதிகுரு நாதரைநாம் போற்ற
சத்தபுரி யுற்றகாயற் பட்டணத்திற் சேர்ந்தே 2

சேர்ந்தொருவருக்கொருவர் சித்தமதி லுற்று
கோர்ந்து குலதுங்க சிவபாண்டி குருவென்று
தேர்ந்து தேர்ந்து ளாடுதுறை கூடுந்துறைநின்று
ஓர்ந்துணர்ந் தோருட்புரம்பு மாகிநகைப்பாரே 3

உட்புரப்பு மற்றுநகை வெண்பிறையணிந்து
கட்புலக்கருவி கதைகாலவரை வென்று
நட்டணை புருவனைக்குள் நானுரவனென்று
சிட்டர் தொழுபாடுந்திருவாடுந்துறை யென்றே 4

பாடுமறை நால்வர்துதி பகலிரவுமற்ற
எடுறையற்றே வளர்ந்த எங்கள் குருநாதர்
ஆடுந்துறைதில்லை அரத்தோயுந் துறைமேவி
கூடுந்துறை யாதிகுரங்காடுந் துறையாமே 5

ஆமெனதிறந்த வாயிலீமென நகைத்தே
ஓமென திறந்துளோதி ஒப்பிலானையுற்று
ஊமெனவு ளாடுந்துறைமேவுங் குருநாதா
நாமென நிறைந்த வுளந்தத்துவர்தா னென்றே 6

நிறைந்தவுளந் திறந்த பெரியோர்கள் நினைவாகி
மறைந்தவரி றந்தவரை வாழ்த்தி வசனிக்குந்
துறந்தவருள் சோதி திருவாடுதுறை மேவி
அரன்செயலை பேசுமாதி யந்த நடுவானே 7

பேசுமறை பூசும்பெரி யோர்கள் பிறைசூடி
மாசுமரு வற்றமறை பன்மலரணிய
நாசிகடுவுற்றபதி நமச்சிவாய மென்று
ஆசிகூறு மாடுதுறை யம்பலவர் தானே 8

அம்பலமனுகத மீராறுகலைமாரி
செம்பொன்னம் பலத்திலருட் சேனுரவிளங்கி
சம்பு திருவாடுதுறை சலக்கரை முன்மேவு
மும்பரரி மாலயனுந் தேடுங்கோயி லென்றே 9

தேடுமரனேடுங்கரப் பிச்சைப்புகு வோர்கள்
பாடுமிதமாடுதுறை பண்துறைமுனதிக்
கூடுங்குருவானகுல சங்கமனர் பாதம்
நாடும் பரிபூரண முன்னும் தொழுவோமென்றே 10

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ திருமாந்துறை

தேவாரம் - பண். - இந்தளம்

அத்தா யன்பர் பங்கில் வாழுமரசே அருளமுதே
முத்தா முப்புர மெரித்த முக்கணமணி முசலே
நித்தா வசிஷ்ட் டநதியின் தென்கரை மேவும் நிமலா
சித்தா சிரங் கொயிலாவீர் திருமாந்துறை சிவமே. 1

கொலைபுலை யில்லாருளத்திற் குடிகொண்டசற் குருவே
நிலைமாரி யலையும் நீசப் போரி லுள்ளவனும் நான்
வலைவீசுவோன் வருமுன் வசிஷ்ட்ட நதிக்கரை வள்ளலே
சிலையாகியென் சித்தமாவீர் திருமாந்துறை சிவமே 2

மானுமழுவேந்தி மலையாசன் மகளிடையில்
வானுலக மண்ணுலகம் வணங்கும் விடைபாகா
வானுயர வரும்வெள்ள நீராடும் வசிஷ்ட்டநதியோ
தேனுயருந் திருத்தொண்டர்கள் திருமாந்துறைசிவமே 3

அலையுஞ் சிந்தையா லவலச் சிந்தையுள்ள யசடன்
நிலையின்றிடா நாயேனடுநல மொன்று மறியேன்
மலைமேலூரி வரும்வசிஷ்ட்ட நதித்தென்கரை மன்னு
தலைநகரங் குடியாகுவீர் திருமாந்துறை சங்கரரே. 4

கருணாகரக் கடவுள்கதி நான்குமளித் தாளும்
பொருணாகரப் பரிபூரணப் புருவத்திடைப் புனிதம்
வருணாகர வசிஷ்ட்டநதித் தெண்கரை வருகும்
திருணாகரஞ் சிரங்கோயிலாய்த் திருமாந்துறைச் சிவமே. 5

தேவர்தொழுந் திருவாசகங் குருவாசகந் திருவே
காவலரொன்பது வால்படும் கஷ்டங் கண்டிடாது
வாவெனவும் வசிஷ்ட்டநதித் தென்கரை வள்ளலே
சீவன்சிரங் கோயிலாவீர் திருமாந்துறைச் சிவமே 6

கண்டங் கருத்தவரென் கருத்தைத் திருத்திக்காணுந்
தொண்டர்பணி தோத்திரப் பாமாலை சூடுபவனே
மண்டலீகர் வணங்கும் வசிஷ்ட்டநதித் தென்கரைவாசே
தெண்டஞ் சிரங்கோயிலாவீர் திருமாந் துறைச்சிவமே 7

அறிவிக்கு ளறிவாகிட யந்தகரணமகல
பிரியாதிரும் பிறவிக்கடற் குளப்படி யாகிடவு
மறியாது வசிஷ்ட்ட நதித்தென்கரையில் மேவுந்
தெரியச் சிரங்கோயிலாவீர் திருமாந்துறைச் சிவமே. 8

கண்டாரிலைக்கருவி கரணங்கள் கொடுமையினல்
விண்டாரிலைச் சித்தாந்த வேதாந்த விளக்கத்தை
வண்டுமலர் வசிட்டநதித் தென்கரைவமுதே
செண்டுமலர் சிரங்கோயிலாய்த் திருமாந்துறைச்சிவமே. 9

சுத்தத்திலுஞ் சுத்தந் திருச்சிற்றம்பலச் சுடரே
நித்தியத்தத்துவ மளிக்கும் நிறைஞ்சன மாமணியே
வத்துவிலுயரும் வசிட்டநதித் தென்கரை மதியே
சித்தம்நிலைச் சிரங்கோயிலாய்த் திருமாந்துறைச்சிவமே 10

திருச்சிற்றம்பலம்.

113945
O-12LVG
N48

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ திருவாலந்துறை சிவக்ஷேத்திரத்தில்
ஸ்ரீமத் கணேசமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியது.

அன்பருள்ளம் அறிவாய் விளங்கும் சிவபெருமான் திருவருள்
என்றைக்கும் விலகாதிருக்கும்படி துதித்த
விண்ணப்பம்.

அன்பருள மறிவாகியு மாலய மானவரே
என்பவமோ கொடிதுபெருங் கொடிதான னவனீசா
வன்பவனுன் வசிட்டநதித் தென்கரை யுடையோ
தென்பு தருவீர் திருவாலந்துறை தேவே.

அறிவரிய வன்பர்பணி அப்பலத் தரசர்
சிறிய பருவத்தில் தேசிகரென்று வந்தவரே
உறியவர் வசிட்டநதித் தென்கரை யுத்தமரே
தெரிய வந்தாளுவீர் திருவாலந் துறை தேவே.

தேவர்திருத் தொண்டர்பணி சப்தத்துறைச் சிவமே
மூவர்முனிவ ரிஷிகளோது முழு முதலே
வாவெனவும் வந்த வசிஷ்டநதித் தென்கரை வமுதே
சீவன் சிவமென்று திருவாலந் துறை தேவே.

துறைகளேழுந் துன்னுமென துள்ளங் குடியாக
கரையறியர பிறவிக் கடற்கண்டு கரையேறி
மறையறியா வசிட்டநதித் தென்கரை வருக
சிறையிற் சேர்த்திடாதீர் திருவாலந்துறை தேவே 4

காலங்கலிகோலங் காணக்கண்கள் கூசுகிறது
ஆலமுண்ட வாயாலருளோ மெனவெனவுங் கூறு
மாலயனுமறியா வசிட்டநதித் தென்கரை வாழ்வே
சீலசித்தர்போற்றுந் திருவாலந்துறைதேவே 5

கோருமன்பர் குறையகற்றுங் குருபரனு மாகும்
பாரும்விண்ணு மண்ட பகிரண்டமும் படைத்தோ
வாருமின்று வசிட்டநதித் தென்கரையின் வாழ்வே
சீரிடாது செப்புந் திருவாலந்துறை தேவே 6

மாரிமன்றுணடிக் கின்றத் திருமலரடிக்கு
ஆறிரண்டுங் கட்டியப்புரமீ ரெட்டையறியும்
வாரிசுகவாரி வசிட்டநதித்தென் கரைவாழ்வே
சீரிடாதுசெப்புந் திருவாலந் துறைதேவே 7

கட்டிலடங் காதமனக் கள்ளனையுங்கட்டி
துட்டசமராடுந் தொண்ணூற்றறுவரையுஞ்சுட்டு
வட்டமலைவூற்றே வசிட்டநதித் தென்கரைவாழ்வே
திட்டுமீதிலேற்றுந் திருவாலந்துறைதேவே 8

குருவருளுமென்று மெனதுள்ளங் குடியாகி
அருவருளே பெருவருளே ஆதியந்த மருளே
வருவருளே வசிட்டநதித் தென்கரையின்வாழ்வே
திருவருள்விலாசத் திருவாலந் துறைதேவே 9

கொண்ட கோலமுடியவுமென் குடியுமீடேரவும்
நண்டளந்த நாழிபாகனன்மை நாடிடவும்
மண்டலீகர் முழுகும் வசிட்டநதித் தென்கரைவாழ்வே
திண்டுமுண்டி லாதுதிரு வாலந்துறைதேவே 10

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஓம்ஸ்ரீ வாலிமாநகரம் வாலைகணபதி காப்பு.

நேரிசை வெண்பா.

முத்திதரும் சித்திதரு மூவேழு சுற்றமும்
பத்தியும் பரம்பரை வாழ்வுந்தரும் - நித்தியமும்
வாலீஸ் புரம்வாலை சவுந்தரியா ளீன்ற
வாலை கணபதிதாள் காப்பு 1

சோதிஅம்பலச்சி சுந்திரநடச்சி சுவாதிட்டானச்சி
மாதிமால்பூரக மாவிச்சிமாணிக்க மரகதச்சி
ஆதிமாணிக்கராறு பத்துமூவரடைக்கலச்சி
வேதியரரிபிரமாதிகள்தேடும்வாலிமாநகர்வாலைசுந்தரியே 2

எங்குமா யெல்லாயுயிருமா யென்னுயிராயிருக்கும்
வங்கென்ப தடைசிவ அட்சரிவாலாம்பிகை மவுனம்
திங்கள்வெண் கதிர்முடி சிவகாமிபரிபுரை திரிபுரையே
மங்களசவுந்தர வாலிமாகர் மேவும் வாலைசுந்தரியே

பண்மணி மாலைக்கோர்த்தருள் விழுங்கும் பரவெளியில்
விண்மணிகோர்த்துயிர்பேதமெலாங்களிற்விண்ணப்பத்தை
எண்மணிகோர்த்துந்த னிணையடிப்பணிவ தெவ்விதமோ
கண்மணியாயிரும் வாலிமாநகர் வாலைசுந்தரியே

எவ்விதமுன்பணி யன்பரையேக்க மற்றிறைஞ்சுவதோ
அவ்விதமவாபுலை ஒளஷியமோம்பல் பொய்மலங்களற்று
செவ்வையொத்திடுமரம்பொருளைவல்வீடுஞ்சேர்வைதந்து
சவ்வும்சறஹணவீடுந்தரும் வாலைசவுந்தரியே 4

நிலைமாறி வோடுமிடகலைபிங்கலை நீச்சுமூச்சை
கலைமாறிஞானக்கண் கொண்டுபாற்குங் கருணைகொடும்
விலையற்றமாணிக்க வித்வலங்கார வேதபுத்தகத்தி
வலைமகன்மகளே வாலிமாநகர் வாலைசுந்தரியே 5

நம்பித்துதிப்பவருளங் கோயிலாயென்றும் நடம்புரியும்
செம்பொனம்பலத்தி சிவஞானவல்லி சிதம்பரமும்
அம்பலம் நாற்பத்து முக்கோணத்தாடும் சிவகாமி யம்மா
அம்பிகை வாலிமாநகர் மேவு வாலைசுந்தரியே 6

மவுனமு மட்டற்றவணக்கமு மணிமந்திரசோடசமும்
கவுனுதியர்தேடும் வீடுங் காலாகாலம் கண்டு
எவுனவாரோக்கிய இந்திரகிரிதாண்டி யிருந்து யேற்றும்
தவந்தரும் வாலிமாநகர்வாழும் வாலைசுந்தரியே 7

தருவாய்வாலை சரஸ்வதி தவளாசனத்தி வாணி
வருவாய் மலர்நான்கு கரணமுங்கட்டி வாசிவெளி
குருவாய் திருநடமாடி யுன்னன்பரைக் கூட்டிகாட்டும்
திருவருட்பாதை வாலிமாகர் வாலைசுந்தரியே. 8

அலையும்புலம்பொறி பூதாதிக ருஷியவத்தையெலாம்
தொலைத்தெந்தனல்லல்தொல்லையெலாம்தீர்ந்துதுதிப்பதற்கு
கலையாயிரத்தெட்டிதழ் நடுவிளங்குங் கண்மணியே
நிலையாயிருக்க வரந்தரும் வாலிமாநகர் வாலைசுந்தரியே 9

ஆடும்திருப்புலியூர் வழிஆக்னை ஆலயத்தில்
பாடும்பரிபுரை பங்கயத்தவளுனைப் பணிவுசெய்து
நாடும்படிக்கு ளானந்த நிஷ்டையும் நாயனுக்கு
தேடுந்திருவுளற் சந்ததிவாழ்க வாலைசுந்தரியே 10

தாயேசரணம் தவளவாணிசரஸ்வதி சரணம்தண்டமிழி
ஆயேசரண மணங்கிவுமை ஆத்தாள்சரணமபிராமி
தூயேசரணந் துரைசாணிசோடஷபாணியே சரணம்
மாயேசரணம் வாலிநகர் வாமியே வாலைசுந்தரியே 11

ஸ்ரீ கயிலாசபரம்பரையார் திருவடிகளே சரணம்.

திருச்சிற்றம்பலம்.

——

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ பரபிரம்ம துணை.

ஸ்ரீமத் கணேசமூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியது,

திருத்தாண்டகம்—பண்,

அன்பருளமறிவாகி அருளுமாகி உருவாகி முளைத்தோங்கு மாதிமலையே
வன்பிறவி வேர்களைய மனுவுமாகி வாலைசற்குருவாகி வந்தமலையே
தென்புதாஸ்ரீராம குருவுமாகி சிறுகாலைதனில்வந்தத் தெய்வமலையே
பின்புகடு முன்பாகும் பெரும்புலியூர் பிரம்மரிஷி மலையாரைப்பேசிலேனே

அன்னைபிதாகுருவாகி வந்தமலையே ஹரிராமகுருவென்றமைந்த மலையே
வன்னெஞ்ச ருரவகற்றி வணங்குமலையே வாலைசற்குருவாகி வாழுமலையே
என்னெஞ்சிலின்பாகி யிருக்குமலையே இருநான்குமீரெட்டிலிசைந்தமலையே
பின்னமில்லா பெருமலையேபெரும்புலியூர் பிரமரிஷிமலையாரைபேசிலேனே

அன்னமயில் கிளிகுயிலுமாடுமலையே ஹரகராவெனுமுழக்கமுள்ளமலையே விண்ணமில்லா மெய்யன்பர் வாழுமலையே வேதாந்தவாலைகுரு வீற்றிருக்குமலையே, சின்னவயதில்வந்த தெய்வமலையே ஸ்ரீராமகுருவாழும் சிகாரமலையே, தென்குமரி திருப்பெரும்புலியூர்மேவும் பிரமரிஷி மலையாரைத்தெரிசிலேனே.

அன்புசிவகுருவுருவாய் வந்தமலையே ஹரிராமகுருவாகி யாடுமலையே முன்போடுமூஷிகராய் முளைத்தமலையே மும்மூலமுளைக்கின்ற மூலர்மலையே, துன்னுமதிரவிகோடி சோதிமலையே திருவமலைவாலைசற்குருவாழ்மலையே, பின்கலையுமிடகலையும் பிரித்துக்காட்டும் பிரமரிஷி மலையாரைப் பேசிலேனே.

அருந்தவத்திற்கறிவாகி அமர்ந்தமலையே ஹரிராமகுருவாகிவந்தமலையே வருந்துணையாயென்றுமொன்றாய் வாழுமலையே வாலைசற்குருவாழு வைர மலையே, மருந்திசர்வாழு மாணிக்கமலையே மாதேவதேவரெல்லாம்வணங் குமலையே, பெருந்துணையே பெரும்பற்றப்புலியூர்தன்னின் பிரமரிஷிமலை யாரைப் பேசிலேனே.

அத்தனுர்பதஞ்சலி யரமர்ந்த மலையே ஹரிராமகுருவாகிவந்தமலையே, வத் துவிலுயர்ந்தவாலைகுருமலையே வாதவூர்மாபினர்கள்வாழுமலையே, சித்தர் களுமுத்தர்களுந் தேடுமலையே திக்குத்திகந்தமுள்ள தீபமலையே, பித்தருக் குகந்தபெரும் புலியூர்வாழும் பிரமரிஷிமலையாரைப் பேசிலேனே

அச்சுதனுமயனு மறியாதமலையே ஹரிராமகுருவாகி வந்தமலையே, சச்சடி யைவிட்டவற்குச்சாமிமலையே தனிச்சோதிசச்சிதா னந்தமலையே, குச்சுவி னைதீர்த்தாளுங்குருமலையே, குணகுடியென் வாலைசற்குருவாழ்மலையே, பிச்சாண்டா ரென்கின்ற பெரும்புலியூர் பிரமரிஷி மலையாரைப் பேசி லேனே.

அறுபத்துமூவருக் கானந்தமலையே ஹரிராமகுருவாகி வந்தமலையே, ஒரு பத்துயொருரான்கா யுயர்ந்தமலையே ஓம்நமசிவாயவென்றோதுமலையே வருங்காலமுணர்விக்கும்வாமமலையே வாலை சற்குருவாழும் வாடாமலையே பிருங்கிரிஷி பதினெண்மர் பெரும்புலியூர் பிரமரிஷி மலையாரைப்பேசி லேனே

ஆட்கொள்ளஹரிராம குருவாய்வந்து அன்பளித்துசென்ற ஆதிசோதி மலையே, வேள்வியாகாதிவளற் வேதமலையே, வேதாந்த வாலைகுரு விமய மலையே, வாள்விழியாள் மயலருக்கும் வாமமலையே வட்டமலை வாத வயித்தியர்மலையே, பாழ்வினையைக் கடத்துகின்றப் பெரும்பலியூர் பிரம ரிஷிமலையாரைப் பாடிலேனே.

O-21926 LVGIV

ஆதவனுமதிவிளங்கு மாதிமலையே ஹரிராமகுருவாகி வந்தமலையே, வாத ரிஷிபதஞ்சலியர் வியாக்கிரமாகி வாலைகுரு வாழ்கின்ற வண்ணமலையே பாதியுண்ட பார்வதியும் பத்தர்சித்தர் முனிவரெல்லாம் வாழ்கின்றபால மலையே, பீதியின்றிபேணுகின்ற பெரும்புலியூர் பிரமரிஷிமலையாரைப் பேசிலேனே.

N48

11394

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ ஆண்டநாயகி ஸ்ரீ ஆண்டநாயகி திருவடி துணை.

முற்றுப்பெற்றது.

4A
10-123

உ

திருச்சிற்றம்பலம்.

ஓம் பழமலைக் கடவுள் துணை.

விளம்பரம்.

ஓம் ஸ்ரீ கயிலாசம், விருத்தகாசி, பழமலைக்கடவுள், விருத்த வாலாம்பிகைத், தாயார் திருவருளுக்கு அன்பராகும் மகா-ா ாஸ்ரீ குணம்,கனம்,தனம் தங்கிய,இராஜாங்க உத்தியோகஸ்தர்களாகும் காங்கிரஸ் சபையார், வர்த்தகர்கள், கிருஷித் தொழிலாளர்கள், மற்றுமுள்ள தொழிலாளர்கள், குடிகளில் தேவர், மானிடர்களாக அவதரித்திருக்கும், அன்பர் அடியார்கள் சமூகம் வணக்கமாய்த் தெரிவித்துக்கொண்டது.

அன்புள்ள அன்பர்களே! ௸ மடாலயவாசியாகும் ஸ்ரீமத் வாலைகுருசுவாமிகள் 18-௵ 18-௴ 18வாரம் 18நாள் 18-நாழிகை 18-வினாடி கடிகையாக, ஆதிஅகஸ்தியராதி முன்னோர்கள் செய்த தவயாகம் செய்யவும் ௸ தவாசிரமம் சரிவரக்கட்டவும், தமிழ் வேதாந்ததிருவாசகப்பாடசாலை அமைக்கவும், ௸ மடத்துக்குவரும் அன்பர்களுக்குப் பசிதீர்க்கவும் ௸சுவாமிகள் உண்டுசெய்த வெண்பா, கலித்துரை, திருவாசதேவாரம் • திருப்பாடல்திரட்டு முதலிய 120 திருக்கோவில் பதிகங்களாகும் 9000 ஒன்பதினாயிரம் செய்யுள்களும் உலகத்தாருக்கு அச்சிட்டு உபகாரமாக்கவும் வேண்டியதால் தங்களால் கூடிய தக்ஷணமுகூர்த்தம் செய்யும்படி கேட்டுக்கொண்டது. நமஸ்காரம் சுபம்.

இந்த புஸ்தகத்தை ௸ சுவாமிகள் உத்திரவின்றி பிறர் அச்சிடவும், விற்பனை செய்யவும் கூடாது.

இப்படிக்கு,

தொண்டர்க்குத் தொண்டன்,

வா. கணேசமூர்த்தி சுவாமி,

௸ மடாலயவாசி.